# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.51/2024** **நாள் : 11.07.2024**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் (CMRL) கீழ்ப்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் எடுத்துச் செல்லும் பிரதான உந்து குழாயில் இணைப்புப் பணிகள் (புரசைவாக்கம் நெடுஞ்சாலையில்) மேற்கொள்ளப்படுவதால் 12.07.2024 அன்று காலை 10.00 மணி முதல் 13.07.2024 மாலை 06.00 மணி வரை (36 மணி நேரம்) மண்டலம்– 5, 6, 8,9 மற்றும் 10 - க்குட்பட்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம்.**

## <u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் (CMRL) கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் எடுத்துச் செல்லும் பிரதான உந்து குழாயில் இணைப்புப் பணிகள் (புரசைவாக்கம் நெடுஞ்சாலையில்) மேற்கொள்ளப்படுவதால் **12.07.2024 அன்று காலை 10.00 மணி முதல் 13.07.2024 மாலை 06.00 மணி வரை** (36 மணி **நேரம்)** மண்டலம்–5 (இராயபுரம்), மண்டலம்–6 (திரு.வி.க நகர்), மண்டலம்–8 (அண்ணா நகர்) மண்டலம்–9 (தேனாம்பேட்டை) மற்றும் மண்டலம்–10 (கோடம்பாக்கம்) - க்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

| மண்டலம் | பகுதிகள் |
|---|---|
| மண்டலம் - 5 (இராயபுரம்) | புரசைவாக்கம் (பகுதி), பெரியமேடு, சௌகார்பேட்டை, ஜார்ஜ் டவுன், ஏழு கிணறு ரோடு, முத்தியால்பேட்டை, வால்டாக்ஸ் ரோடு, எழும்பூர், பூங்கா நகர், சிந்தாதிரிப்பேட்டை, புதுப்பேட்டை, சேப்பாக்கம் (பகுதி), கொண்டிதோப்பு |
| மண்டலம் - 6 (திரு.வி.க. நகர்) | ஓட்டேரி, அயனாவரம், பெரம்பூர், செம்பியம் |
| மண்டலம் - 8 (அண்ணா நகர்) | கீழ்ப்பாக்கம், வில்லிவாக்கம், கெல்லிஸ், புரசைவாக்கம் (பகுதி) |
| மண்டலம் - 9 (தேனாம்பேட்டை) | திருவல்லிக்கேணி, சேப்பாக்கம் |
| மண்டலம் - 10 (கோடம்பாக்கம்) | தியாகராய நகர், சைதாப்பேட்டை |

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள CHN_Metro_Water CMWSSB chennaimetrowater